பதிவு எண். M 6311 ★ தொலைபேசி: 61331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: கார்த்திகை 14 (30—11—71) செவ்வாய் வெளியூர்: கார்த்திகை 15 (1—12—71) புதன் [இதழ்: 140

வெளி மாநிலப் பரிசுச் சீட்டுகள்

தமிழகத்தில் விற்க நிபந்தனையுடன் அனுமதி

சென்னை, நவ. 30—

தமிழ்நாட்டில் மற்ற மாநிலங்களின் பரிசுச் சீட்டுகள் இனி விற்பனை செய்யலாம்; தமிழ்நாடு அரசு இதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

எந்தெந்த மாநிலங்களில்

(4-ம் பக்கம் பார்க்க)

சென்னை மேயராக திருமதி காமாட்சி செயராமன்

துணை மேயராக என். வி. என். சோமு தேர்வு

எதிர்த்துப் போட்டியிட்ட சிண்டிகேட்--சுதந்தராக் கூட்டுக்குத் தோல்வி

சென்னை, நவ. 30-

சென்னை மாநகராட்சிமன்றத்தின் 1971-72-ம் ஆண்டுக்குரிய மேயராகத் திருமதி காமாட்சி செயராமன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

துணை மேயராகத் திரு. என். வி. என். சோமு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மேயர், துணை மேயர் தேர்தல்களில் கழக வேட்பாளர்களை எதிர்த்து சிண்டிகேட் – சுதந்தராக் கட்சியினர் கூட்டாகச் சேர்ந்து போட்டியிட்டபோதிலும், கழக வேட்பாளர் இருவரும் பெருவாரியான வாக்குகளுடன் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நேற்று மாலை 4-45 மணிக்கு, புதிய மேயரையும் துணை மேயரையும் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, மேயர் சா. கணேசன் தலைமையில் மாநகராட்சி மன்றத்தின் கூட்டம் நடைபெற்றது.

மேயர் சா. கணேசன், மேயர் தேர்தலை நடத்திவைத்தார்.

மேயர் பதவிக்கு கழகச் சார்பில் முன்மொழியப்பட்ட திருமதி காமாட்சி செயராமன் 74 வாக்குகளையும், அவரை எதிர்த்து நிறுத்தப்பட்ட சுதந்திரா வேட்பாளர் திரு. சி. ஆர். நரசிம்மன் 47 வாக்குகளையும் பெற்றனர்.

திருமதி காமாட்சி செயராமன் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக சா. கணேசன் அறிவித்தார்.

மாநகராட்சி தி. மு. க. தலைவர் வி. முனுசாமி, எதிர்க் கட்சித் தலைவா குப்புசாமி இருவரும் திருமதி காமாட்சி செயராமனை அழைத்து வந்து மேயர் இருக்கையில் அமர்த்தினர்.

துணை மேயர் தேர்தல்

மேயர் திருமதி காமாட்சி செயராமன், துணை மேயர் தேர்தலை நடத்தினுர்.

கழக வேட்பாளர் திரு. என். வி. என். சோமு 76 வாக்குகளும் சிண்டிகேட் வேட்பாளர் திரு. பக்தவத்சலம் 44 வாக்குகளும் பெற்றனர்; 2 வாக்குகள் செல்லாதவை என்று மேயர் அறிவித்தார்.

திரு. என். வி. என். சோமு துணை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக மேயர் திருமதி காமாட்சி செயராமன் அறிவித்தார்.

முன்னுள் மேயர் மைனர்மோசஸ், நாராயணபிள்ளை ஆகியோர் துணைமேயர் என்.வி.என். சோமுவை அழைத்து வந்து துணை மேயர் இருக்கையில் அமர்த்தினர்.

புதிய மேயர், துணை மேயர் ஆகியோரைப் பாராட்டி முன்னுள் மேயர், துணை மேயர், மற்றும் மாநகராட்சிமன்றக் கட்சிகளின் தலைவர்களும் உறுப்பினர்களும் பேசினர்.

காமாட்சி செயராமன்

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து மேயர் திருமதி காமாட்சி செயராமன் பேசியதாவது:—

"நம்மையெல்லாம் ஆளாக்கிய அண்ணாவை முதலில் வணங்குகிறேன்.

என் கணவரின் வழியினைப் பின்பற்றி -- சென்னை மாநகரில் உங்கள் அனைவரது ஒத்துழைப்போடும் எல்லாப் பணிகளையும் மேற்கொள்வேன் என்று இந்த நேரத்தில் உறுதி கூறுகிறேன்.

எனக்கு இந்தப் பெரும் பொறுப்பை வழங்கிய கழகத் தலைவர் -- முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கட்கும், பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் -- பொருளாளர் எம். ஜி. ஆர். ஆகியோர்களுக்கும், கழகக் கண்மணிகளுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே என்னைப் பாராட்டிப் பேசிய பாராட்டுக்கள் அனைத்தையும் எனக்கு வழங்கிய ஆசியாக ஏற்றுக்கொள்கிறேன்.

தமிழக அரசு, சென்னை நகர மேம்பாட்டுக்காகக் கூவம் திட்டம் -- வீராணம் குடிநீர்த் திட்டம் போன்றவைகளைப் போட்டுப் பல கோடி ரூபாய் செலவழித்து வருகிறது; இவைகளையெல்லாம் பயன்படுத்தித் தூய்மையான எழில் கொழிக்கும் நகரமாகச் சென்னை நகரை வைத்திருப்பதற்கு உங்கள் மேலான ஒத்துழைப்புடன் என் சக்திக்கேற்ற வகையில் அயராது பாடுபடுவேன்.

சென்னை நகர வளர்ச்சிக்கும், நகரைத் துப்புரவாக வைத்துக் கொள்ளுவதற்கும் தகுந்த நடவடிக்கை எடுப்பேன் என்பதை உறுதியுடன் கூறிக்கொள்கிறேன்.

இங்கே என்னைப் பாராட்டிப் பேசியவர்கள், 'எல்லா வகையிலும் வாய்ப்பும் -- வசதியும் கிடைத்து ஒரு வெற்றிகரமான மேயராக இருப்பீர்கள்' என்றும், 'கட்சித் தலைவர்கள் ஒத்துழைப்பைப் பெறவேண்டும்' என்றும் கூறினுர்கள்.

உங்கள் பாராட்டுதல்களை எல்லாம் நல்லாசியாக நான் பெற்றுக்கொண்டு, 'கட்சித் தலைவர்களின் ஒத்துழைப்பை மட்டுமல்ல -- உறுப்பினர் அனைவரின் ஒத்துழைப்பையும் பெற்றுப் பணியாற்றுவேன்' எனக் கூறிக்கொள்கிறேன்.

துணை மேயராக என். வி. என். சோமு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறுர்; அவரது மன்ற நிகழ்ச்சி அனுபவங்கள் எனக்கும் பெரிதும் பயன்படும் என்று முழுவதுமாக நம்புகிறேன்.

மீண்டும் உங்கள் அனைவருக்கும் என் மனம் நிறைந்த நன்றியறிதலையும் -- வணக்கத்தையும் கூறி, 'அண்ணா வாழ்க' எனக் கூறி அமர்கிறேன்."

என். வி. என். சோமு

துணை மேயர் என். வி. என். சோமு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது:—

"மிகவும் எளிய தொண்டனுக இருந்த எனக்கு இந்தப் பதவியைக் கொடுத்த முதலமைச்சருக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் நிச்சயம் சென்னையின் வளர்ச்சிக்குப் பாடுபடுவேன்.

எனக்கும் -- மேயருக்கும் உங்கள் ஒத்துழைப்பைத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நான் பணிவன்போடு கூறிக்கொள்வதெல்லாம், 'குறைவாகச் சொல்லி நிறைவாகச் செய்வேன்' என்பது தான்.

இந்தப் பதவியை, எள்ளளவும் பாரம்பரியம் குறையாமல் நான் பாதுகாப்பேன்.

நான் சட்டம் படித்தவன் என்று இங்கே சொன்னுர்கள்; என் சட்டப் படிப்பை இந்த நகரம் வளர்ச்சியடைவதற்குப் பயன்படுத்துவேன்."

புதிய மேயரின் வாழ்க்கைக் குறிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க நாள் முதல் கழகத்தில் தீவிரத் தொண்டராக இருந்து அரும்பணியாற்றி வந்தவரும்-- சென்னை 19-வது வட்ட மாநகராட்சி மன்ற உறுப்பினராக இருந்தவரும் -- அண்மையில் இயற்கையெய்தியவருமான தோழர் ந. செயராமன் அவர்களின் துணைவியாராவார்—புதிய மேயர் திருமதி காமாட்சி செயராமன்.

தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூரில் 1939-ல் பிறந்த திருமதி காமாட்சி, 1962-ல் தோழர் செயராமனை மணந்தார்.

தஞ்சை கல்யாணசுந்தரம் உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ள திருமதி காமாட்சி செயராமன், அண்மையில், (திரு. செயராமன் இயற்கையெய்தியதையடுத்து நடந்த இடைத் தேர்தலில்) 19-வது வட்டத்திலிருந்து மாநகராட்சி மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தையும் உள்ளன.

சென்னை மாநகராட்சியின் 42-வது மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருமதி காமாட்சி செய

(4-ம் பக்கம் பார்க்க)

கலைஞர் அழைப்பை ஏற்ற கல்வி நிபுணர்கள்

தமிழகம் வந்து ஆய்வுரை வழங்குவர்

நியூயார்க், நவ. 30—

தமிழ்நாட்டின் கல்லூரிக் கல்வியில் உரிய மாற்றங்கள் செய்வதுபற்றி தமிழக அரசுக்கு ஆய்வுரை வழங்கும் பொருட்டுப் புகழ்பெற்ற இரண்டு கல்வி நிபுணர்கள் அமெரிக்காவிலிருந்து வரவிருக்கிறுர்கள்; இத்தகவலை தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்.

பல்வேறு உலக நாடுகளைச் சேர்ந்த 180 கல்லூரிகளுக்குக் கல்வி ஆலோசகராக விளங்கும் டாக்டர் பிராஸ்ரிபா, விஸ்கான்சி நகரைச் சேர்ந்த டாக்டர் லோவட் ஆகியவர்களே அந்தக் கல்வி நிபுணர்கள்.

இந்த இரண்டு நிபுணர்களுடனும் தமிழக முதல்வர் நேற்று இரண்டு மணி நேரம் விவாதம் நடத்தினுர்.

சென்னையில் உள்ள இரண்டொரு கல்லூரிகளைத் தேர்ந்தெடுத்து அங்கே இந்த நிபுணர்கள் கல்லூரிக் கல்வி முறை பற்றி ஆய்வு நடத்துவார்கள்; அமைச்சர்கள்--பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள்--கல்வி அதிகாரிகள் ஆகியோருடன் விவாதிப்பார்கள்.

உயர்மட்டக் கல்வியை நவீனமயமாக்குவது குறித்தும்--முற்போக்கான முறையில் அதனைத் திருத்தியமைப்பது குறித்தும் தமிழக அரசுக்கு இந்த நிபுணர்கள் ஆலோசனை கூறுவார்கள்.

இத்தொடர்பில் முதல்வர் கலைஞர் மேலும் கூறியதாவது:—

"கல்லூரிகளில் கல்விச் சூழ்நிலை நிலவவேண்டும்; அப்போதுதான் மாணவர்கள் கல்வியில் முழுக்க முழுக்கத் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள முடியும்.

"கல்லூரிகள் பட்டம் வழங்கும் நிலையங்களாக மட்டுமன்றி மேலும் மேலும் அறிவு பெறத் தூண்டும் நிலையங்களாகவும் விளங்கவேண்டும்."

சென்னை மாநகராட்சிக்குப் புதிய பெண் உறுப்பினர்கள்

சென்னை, நவ. 29—

சென்னை மாநகராட்சிமன்ற உறுப்பினராக ஐந்து பெண்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

மாநகராட்சிமன்ற விதிகளின்படி மாநகராட்சிக்கு மொத்தம் 6 பெண்கள் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்; ஆனுல் ஒரே ஒரு பெண் உறுப்பினர்தான் ஏற்கனவே மாநகராட்சியில் இருக்கிறுர்.

எனவே, இப்போது 5 பெண் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறுர்கள். இவர்களைச் சேர்த்து மாநகராட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை 131 ஆக உயர்ந்துள்ளது.

நியமன உறுப்பினர்கள் வருமாறு:—

திருமதிகள் அலமேலு அப்பாதுரை, குப்பம்மாள், எஸ். பி. சற்குணம், சாவித்திரி சபாபதி, இராசம்மாள்.

கலைஞருடன் தொலைபேசித் தொடர்பு

இளமுருகு பொற்செல்வி பேசினுர்

குளித்தலை, ந . 30—

குளித்தலை 'அஞ்சுகம்' வார ஏட்டின் ஆசிரியரும் -- கழக முன்னணித் தோழருமான திரு. மீ. சு. இளமுருகு பொற்செல்வி -- திருமதி பொற்செல்வி இளமுருகு ஆகிய இருவரும் குளித்தலையிலிருந்து நியூயார்க் நகருக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு முதல்வர் கலைஞருடன் பேசினர்.

தாம் முழு நலத்துடன் இருப்பதாகவும், மேற்கொண்டிருக்கும் பயணம் இனிமையாகவும் வெற்கரமாகவும் அமைந்துள்ளதென்றும் கலைஞர் தெரிவித்தார்.

முஜிபுர் ரகிமான் மீதான விசாரணை நிலை என்ன?

அனைத்துநாட்டுக் கமிஷன் தெரிவித்துள்ள கவலை

ஜெனிவா, நவ. 30—

வங்காள தேசத் தலைவர் ஷேக் முஜிபுர் ரகிமானின் வழக்கு விசாரணை பற்றி ஒன்றுமே தெரியாமலிருக்கும் இரகசிய நிலை குறித்துச் சட்ட இயல் நிபுணர்களின் அனைத்துநாட்டுக் கமிஷன் கவலை தெரிவித்தது.

"முஜிபுர் ரகிமானுக்கு இராணுவ நீதிமன்றம் மரண தண்டனை விதிக்குமானுல், பாகிஸ்தான் அதிபர் யாகியா கான் கருணை காட்ட வேண்டும்" என்று கேட்டுக்கொள்ளும் ஒரு தந்தியை அது அனுப்பியிருக்கிறது.

"முஜிபுர் ரகிமான் விசாரணை சம்பந்தமான பல கேள்விகளுக்குப் பாகிஸ்தான் அரசாங்கம் பதில் தரவேண்டும்" என்று அக்கமிஷன் கேட்டுக்கொண்டிருக்கிறது.

"முஜிபுர் ரகிமான் கொல்லப்பட்டால், ஏற்கனவே உள்ள துயரமான நிலவரம் மேலும் மோசமடையும்" என்று அது குறிப்பிட்டிருக்கிறது!

அண்ணா சாலை

விரிவுபடுத்தப்படுகிறது

சென்னை, நவ. 29—

செனிடாப் சாலையிலிருந்து மர்மலாங் பாலம் வரை சுமார் ஒன்றரை மைல் தூரத்துக்கு அண்ணா சாலையை விரிவுபடுத்துவதற்கு அரசு ரூ. 6 இலட்சம் அனுமதித்திருக்கிறது.

இந்த இடத்தில் ஒரே நேரத்தில் 4 கார்கள் போவதற்கான இடைவெளிதான் இருக்கிறது. இதை 6 கார்கள் போவதற்கான இடைவெளியாக விரிவாக்கப்படும்.

ஏற்கனவே இந்த வேலை துவங்கி விட்டதென்றும், இன்னும் 2 மாதங்களில் முடிந்துவிடும் என்றும் நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த அதிகாரி கூறினார்.

அரசு ஊழியர்களுக்கு ஒதுக்கப்படும் வீடுகள்

வாடகை வசூல் பற்றிய அறிவிப்பு

திருச்சி, நவ. 29—

1970 அக்டோபர் 2-ம் நாள் அல்லது அதற்குப்பின் அரசு வீடுகள் ஒதுக்கப்பட்ட அரசு ஊழியர்கட்கு, ஊதியத்தில் 10 சதவிகிதம் வீட்டு வாடகை வசூலிக்கப்படும்; அவர்களுக்கு வீட்டு வாடகைப்படி நிறுத்தப்படும்.

இந்திய வர்த்தகக் கப்பல்களுக்குக் கட்டுப்பாடுகள்

பம்பாய், நவ. 27—

"இந்திய வர்த்தகக் கப்பல்கள் பம்பாய்க்கு வடக்கே உள்ள துறைமுகங்களுக்குச் செல்வதாக இருந்தால், இந்தியக் கடற்படையின் முன்னனுமதியைப் பெற வேண்டும்"

என்று கப்பல் போக்குவரத்து இயக்குநர் அலுவலகம் தெரிவித்திருக்கிறது.

மேற்கு ஆசிய வளைகுடா துறைமுகங்களுக்குச் செல்வதாகயிருந்தாலும் முன்னனுமதியைப் பெற வேண்டும்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மத்திய அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது.

தங்களுடைய கப்பல்கள் செல்லவிருக்கும் இடங்கள் — தேதி விரங்களைப் பத்திரிகைகளில்வெளியிடாதிருக்குமாறும் வர்த்தகக் கப்பல்களுக்கு மத்திய அரசு தெரிவித்திருக்கிறது.

இந்தியத் துறைமுகங்களில் மாலை முதல் அதிகாலை வரை கப்பல் நடமாட்டங்களை நிறுத்திவைக்க அரசு யோசனை செய்து வருகிறது.

நாட்டைக் காக்க அணி திரளுவோம்

நாட்டு மக்களுக்கு நாவலர் அன்பழைப்பு

சென்னை, நவ. 29—

"நெருக்கடி மிகுந்த நேரத்தில், நாம் அனைவரும் ஒரே அணியில் திரளவேண்டும்; நாட்டின் சுதந்தரத்தைவிட முக்கியமானது வேறெதுவுமில்லை; எனவே, நாட்டைக் காக்க நாம் அனைவரும் ஆயத்தமாக வேண்டும்.

"அலுவலகங்களிலும் — தொழிற்சாலைகளிலும் — வயல் வெளிகளிலும் பணியாற்றுவோர் தங்கள் கடமையைச் சரிவரச் செய்வதே நாட்டுக்கு அவர்கள் செய்யும் சிறந்த தொண்டாகும்."

இவ்வாறு தேசிய மாணவர் படையின் ஆண்டு விழாவில் கலந்துகொண்டு தமிழகக் கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் உரையாற்றுகையில் கூறினார்.

சென்னை இராசரத்தினம் விளையாட்டு அரங்கில் தமிழ்நாடு — பாண்டிச்சேரி மாநிலத் தேசிய மாணவர் படையினர் 22-வது ஆண்டு விழா நடந்தது.

விழாவையொட்டி, தரைப்படை — கடற்படை — விமானப் படை ஆகியவற்றில் பயிற்சிபெற்றுவரும் தேசிய மாணவர் படையைச் சேர்ந்தவர்கள், தங்கள் பயிற்சித் திறமையைக் காட்டினார்கள்.

போர் முனையில் எதிரிகளை முறியடிக்கும் வகையில் போர் ஒத்திகையைச் செய்து காண்பித்தார்கள்.

வீரர்கள் எதிரிகளின் குண்டுகளைப் பொருட்படுத்தாமல் எவ்வாறு ஊடுருவிச் செல்வது — எதிரிகளிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ளப் புகை மண்டலத்தை எழுப்பிக் கொண்டு அதன் நடுவில் மறைந்து செல்வது — போர் முனையில் வீரர்கள் காயமடைந்தால் அவர்களை அடுத்த அணி எப்படிக் காப்பாற்றும் — என்பதையெல்லாம் விளக்கிக் காட்டினார்கள்.

விமானப் படை போர்க் காலத்தில் எப்படிப் பணியாற்றுகிறது என்பதைப் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் சித்தரித்துக் காட்டினார்கள்; இவர்கள், மூன்று 'புஷ்பக்' ரக விமானங்களில் மைதானத்துக்கு மேலே பறந்து தங்கள் திறமையைக் காட்டினார்கள்.

கடலில் கப்பற் படை எவ்வாறு அணிவகுத்துச் செல்லும் என்பதை மாதிரிக் கப்பல்கள்மூலம் விளக்கப்பட்டது.

தேசிய மாணவர் படையில் பயிலும் பெண்கள், கம்பியில்லாத் தந்தி மூலம் போரில் காயம் அடைந்தவர்கள் குறித்துத் தகவல் பெறும் முறையையும், அதன்பிறகு சண்டை நடந்த இடத்துக்குச் சென்று காயம்பட்ட வீரர்களைத் தூக்குப் படுக்கையில் தூக்கி வந்து சிகிச்சை அளிக்கும் முறையையும் விளக்கினார்கள்.

போர் முனையில் பயன்படுத்தப்படும் கவச வண்டிகள் — டாங்கிகளை நொறுக்கப் பயன்படுத்தப்படும் இராட்சத பீரங்கி ஆகியவை பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

ஆயத்த நிலையில் கடற் படை!

கொச்சி, நவ. 29—

"இந்தியா மீது பாகிஸ்தான் போர் தொடுத்தால், பாகிஸ்தான் கப்பற்படையை முறியடிக்க நமது கப்பற்படை தயாராக இருக்கிறது.

"இந்திய கப்பற்படை முன்பைவிட பலம் வாய்ந்ததாக — நவீன கருவிகள் கொண்டதாக இருக்கிறது.

"கடலில் — இந்திய எல்லைக்கு உட்பட்ட பகுதியில், பாகிஸ்தான் கப்பல் ஒன்றைக்கூட நுழைய விடமாட்டோம்.

"போர் வந்தால், நமது கப்பற்படைக்கு உதவி செய்ய ஏராளமான படகுகள் தேவைப்படும்; மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள், கப்பற்படையுடன் ஒத்துழைத்து — தேவைப்படும்போது படகுகளையும் கொடுத்து உதவ வேண்டும்"

என்று கப்பற்படை அதிகாரி வி. கே. காமத், கொச்சியில் மீன்பிடிப்போர் பொழுது போக்குச் சங்க ஆண்டு விழாவில் பேசுகையில் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார்.

முகவை மாவட்ட சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுச் செயலாளரும் சட்டமன்ற மேலவை உறுப்பினருமான சி.ஆர். கோலப்பா தலைமையிலும் — அருப்புக் கோட்டை நகர தி.மு.க. செயலாளர் பி. பி. என். நல்லதம்பி முன்னிலையிலும் இராமனுதபுர மாவட்ட சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க அமைப்புக் கூட்டம் 10—11—71-ல் நடைபெற்றது; அதுபோது தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் வருமாறு:—

தலைவர்: ப. பெ. ந. நல்லதம்பி; துணைத் தலைவர்: எஸ். செல்லையா; செயலாளர்: க. முத்தையா; துணைச் செயலாளர்: சணபதி; பொருளாளர்: எஸ். பொன்ராசு; செயற்குழு உறுப்பினர்கள் எஸ். புனமாலை, க. மாரியப்பன், மா. பரமன், எஸ். மலையாண்டி, பி. இருளப்பன், சொ. மு. மாரியப்பன், ஐ. மாடசாமி, மா. இராமகிருட்டினன்.

சி. ஆர். கோலப்பாவுக்குப் பாராட்டு

அருப்புக்கோட்டை நகர சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் திரு. சி. ஆர். கோலப்பா எம்.எல்.சி. அவர்களுக்கு 10—11—71-ல் பாண்டியன் திடலில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

விழாவிற்கு திரு. வால்ராஜ் தலைமைதாங்கினர்.

திரு. கோலப்பா எம்.எல்.சி. அவர்களுக்கு நகர தி. மு. க. — சவரத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் பல்வேறு சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கங்கள், மற்றும் தி. மு. க. சார்பு மன்றங்கள் சார்பில் மலர்மாலைகளும் — கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டது.

திரு. கோலப்பா அவர்களைப் பாராட்டி நகர தி. மு. க. செயலாளர் பி. பி. என். நல்லதம்பி, மாவட்ட தி. மு. க. பிரதிநிதி பிச்சை, செல்லையா, நாகர்கோவில் சேவியர், சவரத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பிரதிநிதி மா. பழனி ஆகியோர் பேசினர்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து திரு கோலப்பா பேசுகையில், தமிழ்நாடு முழுவதும் சலவையாளர் முன்னேற்றச் சங்கச் சார்பில் சலவை சோடா வழங்குவதை ஒற்றுமையாக சேர்ந்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

சங்கத் தலைவர் க. முத்தையா நன்றி நவின்றார்.

குளித்தலையில் இலக்கிய விழா

தமிழ் கா. சு. இலக்கியக் குழு நடத்தியது

குளித்தலை 'கா. சு.' இலக்கியக் குழுவின் எட்டாவது ஆண்டு விழா, 20, 21-ஆம் நாட்களில் கடம்பர் கோவில் பள்ளித் திடலில் நடைபெற்றது.

நவ. 20-ஆம் நாளன்று, 'சொல் எல்லாம் சொல்லே' என்ற தலைப்பில் பேராசிரியர் இராதாகிருட்டினன் எம்.பி. தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது; திருவள்ளுவர் குறித்து நல்கணேசனும், பாரதியார் குறித்து தாமரைச்செல்வனும், பாரதிதாசன் குறித்து வை. கிருட்டினமூர்த்தியும் கவிதை பாடினார்கள்.

வரவேற்புரையை வழக்கறிஞர் அஜீசும், தொடங்கி வைத்தலை வழக்கறிஞர் சுந்தரமூர்த்தியும், நன்றி கூறலை இளமுருகு பொற்செல்வியும், தமிழ் வாழ்த்தை சகுந்தலாபாயும் நிறைவு செய்தார்கள்.

நவ. 21-ஆம் நாள் காலையில், திருக்குறள், 'ஆள்பவர்களுக்கான நூலா? ஆளப்படுபவர்களுக்கான நூலா?' என்ற தலைப்பில், பட்டிமன்றம்—குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடைபெற்றது; 'ஆள்பவர்களுக்கான நூல்' என்ற பகுதியில் அ. வ. இராசகோபாலன், நல்கணேசன், குருநாதன் ஆகியோரும், 'ஆளப்படுபவர்களுக்கான நூல்' என்ற பகுதியில் சாமிமுத்து, நெல்லையப்பன், புஷ்பநாதன் ஆகியோரும் வழக்காடினர்; 'ஆளப்படுபவர்களுக்கான நூலே' என்று அடிகளார் தீர்ப்புக் கூறினார்கள்.

வரவேற்பை கு. வீ. முத்துசாமியும், தொடங்கிவைத்தலை திருமாவளவன் மதியும், நன்றியுரையை இளமுருகு பொற்செல்வியும், தமிழ் வாழ்த்தை சகுந்தலாபாயும் நிறைவு செய்தனர்.

அன்று மாலை, 'தித்திக்கும் தமிழ்' என்ற தலைப்பில் சென்னைத் தமிழ் வட்டம் தலைவர் வி. சுப்பையா ஐ. ஏ. எஸ். தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது; சென்னை மேயர் சா. கணேசன், பேராசிரியர்கள் கு. திருமேனி, ரம்லோலா மாஸ்கரனேசு, இராகவன் ஆகியோர் இலக்கிய விருந்தளித்தனர்.

வரவேற்பை இளமுருகு பொற்செல்வியும், தொடங்கிவைத்தலை மா. கந்தசாமியும், தமிழ் வாழ்த்தை சகுந்தலாபாயும் நிறைவு செய்தனர்.

தாய் — சேய் நலம் பேணுவதில் அரசின் சாதனை

இறப்புவிகிதம் பெருகியிருந்த நிலையில் மாறுதல்

போதிய சத்துணவு இல்லாமையினால் ஏற்படும் விளைவு — பெற்றோர்களுக்கு அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, நவ. 29—

"உலகத்தில் எந்த நாட்டையும்விட நம் நாட்டில்தான் ஊனமுடைய குழந்தைகள் — அறிவுக் குறைவுடைய குழந்தைகள் — மூளை வளர்ச்சியே இல்லாத குழந்தைகள் — ஊனமாகவே பிறக்கின்ற குழந்தைகள் — உடல் கோளாறுகளோடு பிறக்கின்ற குழந்தைகள், சேரவேண்டிய வைட்டமின் சத்துக்கள் சேராத காரணத்தினால் குறைபாடுகளோடு பிறக்கின்ற குழந்தைகள் அதிகம்; அந்த நிலை இப்பொழுது ஓரளவுக்கு மாற்றப்பட்டுவருகிறது.

"தாயும் காப்பாற்றப்பட வேண்டும் — பெற்றெடுக்கப்படும் குழந்தைகளும் காப்பாற்றப்பட வேண்டும்; அதற்கான யோசனைகளைச் சொல்ல — உரிய அறிவுரைகளைப் பெற — மருத்துவ வசதிகளைப் பெற இப்படிப்பட்ட விடுதிகள் ஆங்காங்கே அமைக்கப்படுகின்றன"

என்று, கல்வி — உள்ளாட்சித் துறை அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை 42-வது வட்டத்தில் தாய் — சேய் நல விடுதியைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் கூறினர்.

'இளங்கோ' நகர் கான்ஸ் சாலையில் மாநகராட்சியால் புதிதாகக் கட்டப்பட்ட இவ்விடுதியின் திறப்பு விழா, 22—11—71 அன்று மேயர் சா. கணேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்தோரை வட்ட மாநகராட்சி உறுப்பினர் வி. தனசேகரன் வரவேற்றார்.

மேயர் சா. கணேசன் அவர்களின் தலைமையுரைக்குப்பின், தாய் — சேய் நல விடுதியைத் திறந்துவைத்து அமைச்சர் நாவலர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:—

"மக்களுடைய தேவைகளை நிறைவேற்றித் தருவதற்காகச் சென்னை மாநகராட்சியினர் ஆற்றிவரும் பல்வேறு பணிகளைக் காண்கிறோம்; அந்த முறையிலே 50 தாய்—சேய் நல விடுதிகள் சென்னை மாநகரத்தினுடைய பல்வேறு பகுதிகளில் நிறுவப்பெற்று 51-வது தாய்—சேய் நல விடுதி இங்கே நிறுவப்படுகிறது என்பது நமக்கெல்லாம் பெருமகிழ்ச்சியளிக்கக்கூடிய ஒன்றாகும்.

நம்முடைய நாட்டில் மகப்பேறு பெறும் தாய்மார்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் இருக்கிறது; பெற்றெடுக்கின்ற குழந்தைகளும் அருமையாகவும் — மிக நல்ல சுகாதாரச் சூழ்நிலைகளோடும் பெற்றெடுக்கப்பட வேண்டும்; பிறந்த பிள்ளைகள் நல்ல முறையில் வளர்க்கப்பட வேண்டும்; இந்த அடிப்படைத் தேவைகளைப் பற்றிய அறிவு போதுமான அளவிலே இல்லாத காரணத்தினாலேதான், நம்முடைய நாட்டில் ஏராளமான தாய்மார்கள் பேறு காலத்தில் இறந்துவிடும் நிலை ஏற்படுகிறது.

பிள்ளைகளைப் பெற்றெடுக்க முடியாத தன்மைகளிலே அவர்கள் வாழ்விழந்து போவதற்கும் அப்படியே பெற்றெடுத்தாலும் குழந்தைகள் செத்தே பிறக்கின்ற நிலையும் சில வேளைகளிலே ஏற்படுகின்றது.

உயிரோடு பிறந்தாலும் சில பிறந்து சில காலந்தான் உயிர் வாழும் நிலை ஏற்படுகிறது.

நம்முடைய நாட்டு இறப்பு விகிதம் இப்படிப்பட்ட தாய் — சேய் நல நிலையங்கள் அங்கங்கே நிறுவப்பட்டு — அதன் மூலம் நல்ல மருத்துவ வசதிகள் செய்துதந்ததன் காரணமாக, ஓரளவுக்குக் குறைந்துள்ளது. அந்த முறையிலே பிள்ளைப் பேறு கொண்ட தாய்மார்கள், பிள்ளையைப் பெற்றெடுப்பதற்குமுன் அவர்கள், மருத்துவ நலன்களைப் பெற வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

கருவுற்றபோதே — வயிற்றுக்குள் வளருகின்றபோதே அந்தக் குழந்தைக்குத் தேவையான உணவினை அளிக்கக்கூடிய ஆற்றலை — பெரும் அளவுக்கு மருத்துவ வசதிகளைப் பெற வேண்டியவர்களாகத் தாய்மார்கள் இருக்கிறார்கள்.

பிள்ளைப்பேறும் மிக எளிதாக நடைபெற வேண்டும்; பிறக்கின்ற குழந்தைகளும் என்னென்ன சத்தோடு — என்னென்ன அடிப்படைத் தன்மையோடு பிறக்க வேண்டுமோ அந்த அளவில் குறைவில்லாமல் பிறக்க — எந்தக் குறைபாடும் இல்லாமல் பிறக்க அதற்கு முன்னாலேயே தாய் காப்பாற்றப்பட்டால்தான், வயிற்றுக்குள் இருக்கும் சிசுவும் ஓரளவுக்கு வளர முடியும்.

வயிற்றுக்குள்ளேயே நன்றாக வளர்ந்தால்தான் வெளியில் வந்த பிறகும் நன்றாக வளர முடியும்.

அதற்குப் பிறகும் ஐந்தாண்டுக் காலம் வரையிலாவது அந்தக் குழந்தைகள் எல்லாம் காப்பாற்றப்பட வேண்டும் — என்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்துத்தான், தாய் — சேய் ஆகிய இரு சாராருக்கும் மருத்துவம் செய்யும் முறையில், தாய் — சேய் நல விடுதிகள் எங்கணும் திறக்கப்பட்டு வருகின்றன.

நாம் அடிப்படை அறிவைச் சரியாகப் பயன்படுத்தாத காரணத்தாலேதான், நம்முடைய சமுதாயம், குழந்தைகள் ஊனக் குறைவோடு பிறக்கின்ற நிலையில் வைத்திருக்கிறோம்.

சாதாரணமாக நெல்லை எடுத்துக்கொண்டால் பொறுக்கு விதைதான் இப்பொழுது வாரி காண்கிறது; 'ஐ.ஆர்.-8' நெல்—'ஐ.ஆர்.-5' நெல்—'கோ. 33' வகை நெல்—'கோ. 22' வகை நெல்—என நாம் விதவிதமான நெல் வகைகளைக் கண்டுபிடித்திருக்கிறோம்.

20 மூட்டைகள் விளைகின்ற இடத்தில் இப்பொழுது 35 மூட்டைகள் எடுக்கிறோம்; 20 மூட்டைகள் விளைந்த இடத்தில், இப்பொழுது 40 மூட்டைகள்—47 மூட்டைகள் விளைகின்ற அளவுக்கு வாரி காணக்கூடிய நெற்களைப் பயன்படுத்துகிறோமென்றால், அந்த நெல் சத்து பொருந்தியதாக ஆக்கப்பட்ட காரணத்தினால் விளைவு அதிகமாக இருக்கிறது.

நெல்லுக்கே அந்தத் தன்மை வேண்டுமென்றால், மனிதனுக்கு எப்படிப்பட்ட தன்மை வேண்டுமென்பதை நீங்கள் உணர வேண்டும்.

ஒரு தென்னங்கன்று வைத்தால் கூட, இரண்டு — மூன்று மாத காலத்துக்கு நீர் பாய்ச்சி — உரம் இட்டு — ஒரு ஐந்து அல்லது ஆறு அடி அளவுக்குத் தென்னங்கன்று வளர்ந்துவிடுமேயானால், பின் அந்த மரம் தானாகவே வளரும்; தினமும் தண்ணீர் ஊற்ற வேண்டியதில்லை.

எந்த ஒரு மரத்தை வளர்க்க வேண்டுமானாலும் செடியாக இருக்கும்போதே அதற்குத் தண்ணீர் ஊற்றப்பட வேண்டும்; சேரவேண்டிய சத்தும் — உரச் சத்தும் சேர்ந்துவிடுமேயானால், பிறகு நீரும் எருவும் இடவேண்டியதில்லை.

புளியமரத்திற்கு நாம் நாள்தோறும் தண்ணீர் ஊற்றுவதில்லை; ஆனால் புளியங்கன்று வைக்கும் பொழுது தண்ணீர் ஊற்றினால் தான் அது வளரும்.

அதேபோன்று, குழந்தையைக் காப்பாற்ற வேண்டிய ஐந்து ஆண்டில் இலவசமாக மருத்துவ உதவி பெற — ஊட்டச் சத்து பெற எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படுகின்ற முறையில், இத்தத் தாய்—சேய் நல விடுதி அமைக்கப்பட்டிருக்கிறது; இதை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

இலங்கைத் தமிழர்கட்கு அந்தமானில் இடம்

ஆயிரம் குடும்பங்களைக் குடியேற்ற யோசனை — அமைச்சர் சத்தியவாணிமுத்து தகவல்

சென்னை, நவ. 29—

"இலங்கையிலிருந்து திரும்பும் 1000 குடும்பங்களை, அந்தமான் தீவில் குடியேற்றலாம்" என்று அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் கூறினார்.

அந்தமான் தீவிலும் — பர்மாவிலும் இரண்டு வாரம் சுற்றுப் பயணம் செய்துவிட்டு, அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள், கல்கத்தாவிலிருந்து விமானத்தில் புறப்பட்டு பிற்பகல் 1-மணிக்கு சென்னை வந்து சேர்ந்தார்; விமான நிலையத்தில் அவருக்குச் சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டது.

செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் கூறியதாவது:—

"இலங்கையிலிருந்து வரும் தமிழர்களைக் குடியேற்றுவதற்கு வசதியாக அந்தமான்—நிக்கோபார் தீவுகளில் 6,000 ஏக்கர் நிலம் தயார் நிலையில் உள்ளது; இந்த நிலங்கள், ரப்பர் தோட்டப் பகுதிகளில் உள்ளன; உடனடியாக இப்போது 1,000 குடும்பங்களைக் குடியேற்றலாம்.

"மீன் பிடிக்கும் தொழிலை மேம்பாடு செய்வதற்காக உடனே 40 குடும்பங்களை அனுப்பி வைக்குமாறு அந்தமான் தீவு அதிகாரிகள் கேட்டுக்கொண்டார்கள்."

"சென்னைக்கும் — அந்தமான் தீவின் தலைநகர் போர்ட் பிளேயருக்கும் இடையே நேரடி விமானப் போக்குவரத்து ஏற்படுத்த வேண்டும்."

"தமிழக அரசு அகதிகள் நலத் துறை இயக்குநராகப் பணியாற்றும் வெங்கடகிருஷ்ணன், விரைவில் இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்தில் அகதிகள் நலத்துறைச் செயலாளராகப் பொறுப்பு ஏற்றுக்கொள்வார்."

எல்லையோரப் பகுதிகள் காலியாகின்றன

புதுடில்லி, நவ. 29—

இந்தியா — பாகிஸ்தான் எல்லை ஓரத்தில் பாகிஸ்தான் பகுதியில் வாழும் மக்கள் எல்லோரையும் காலி செய்து உட்பகுதிகளுக்கு அனுப்பும் நடவடிக்கைகளைப் பாகிஸ்தான் அதிகாரிகள் தீவிரப்படுத்தியிருக்கிறார்கள்.

குறிப்பாக லாகூர், சியால்கோட் பகுதிகளில் இந்த நடவடிக்கைகள் அதிகத் தீவிரமாக நடைபெறுகின்றன.

கட்டாயக் கிராமப் பணி

புதிய டாக்டர்கட்கு அரசு நிபந்தனை

தஞ்சாவூர், நவ. 29—

"அரசுப் பணிக்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் டாக்டர்கள் இரண்டு ஆண்டுகளுக்குக் கட்டாயமாகக் கிராம மருத்துவமனைகளில் பணியாற்ற வேண்டுமென அரசு முடிவு செய்திருக்கிறது.

"கிராமப் பகுதிகளில் டாக்டர்கள் இல்லாத பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இது ஒரு வழியாகும்"

என்று, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், செய்தியாளர்களிடம் கூறினார்.

முக்கிய நகரங்களில் புதிய தொலைபேசித் தொடர்புகள்

புதுடில்லி, நவ. 29—

"1968—69-ஆம் ஆண்டில், பம்பாய் — கல்கத்தா — டெல்லி — சென்னை ஆகிய நகரங்களில், முறையே 9174, 2810, 9599, 3012 என்ற அளவில் தொலைபேசித் தொடர்புகள் அளிக்கப்பட்டன.

"1969—70-ஆம் ஆண்டில் இந்நகரங்களில் 10714, 3016, 11701, 3505 தொலைபேசிகட்கு தொடர்பு அளிக்கப்பட்டது.

"1970—71-ஆம் ஆண்டில் பம்பாய் — கல்கத்தா — டெல்லி — சென்னை ஆகிய நகரங்களில் முறையே 18597, 4900, 11555, 5188 புதிய தொலைபேசித் தொடர்புகள் அளிக்கப்பட்டன."

இந்தத் தகவல்கள், நாடாளுமன்ற மேலவையில் தெரிவிக்கப்பட்டன.

கல்பாக்கம் அணு உலை ஆராய்ச்சி நிலையம்

தலைமையமைச்சர் தகவல்

புதுடில்லி, நவ. 29—

"அணு உலை ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்காக மொத்த ரூ 25 கோடி நான்காவது திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது; இத்தொகையில் ரூ 11 கோடி, துரித பீடர் சோதனை அணு உலை அமைப்பதற்காக ஒதுக்கப்படும்; இது, அந்த ஆராய்ச்சி நிலையத்தின் முக்கிய பரிசோதனை வசதியாக அமையும்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"சென்னைக்கு அருகே கல்பாக்கத்தில புதிதாகத் துவக்கப்பட்டுள்ள அணு உலை ஆராய்ச்சி நிலையத்தில பிரான்சு நாட்டின் உதவியுடன் வடிவமைக்கப்பட்டு வரும் துரித பீடர் சோதனை அணு உலையின் வடிவமைப்புப் பணி முடிவடையும் நிலையில் இருக்கிறது. 1972-ஆம் ஆண்டில் அணு உலைக் கட்டடப் பணி துவங்கும்.

"இது சம்பந்தமான சோதனைகள் நடத்துவதற்காக இரண்டு பொறியியல் கட்டடங்களும், சில துணைக் கட்டடங்களும் — ஊழியர் குடியிருப்புக் கட்டடங்களின் ஒரு பகுதியும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன; இவை எல்லாவற்றையும் கட்டுவதற்கு, இதுவரையில் ரூ. 1.50 கோடி செலவாகியிருக்கிறது."

வங்க தேசம் பற்றி வெளிநாட்டில் விளக்கம்

இந்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கையின் செலவு

புதுடில்லி, நவ. 29—

வெளிநாடுகட்குச் சென்று வங்க தேசப் பிரச்சினையை விளக்குவதற்காகப் பல மத்திய அமைச்சர்களும் — அதிகாரிகளும் ரூ. 3.74 இலட்சத்துக்கும் அதிகமாகவும், ரூ. 1.71 இலட்சத்துக்கு அந்நியச் செலாவணியும் செலவழித்துள்ளனர்.

நாடாளுமன்ற மேலவையில், கேள்வி நேரத்தின்போது வெளிவிவகார அமைச்சர் சுவரண் சிங் இத்தகவலைத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் 'மாலிப்டினம்' படிவங்கள்

புதுடில்லி, நவ. 29—

"தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்திலுள்ள கரைகுட்டம் என்ற ஊருக்கு அருகில் 'மாலிப்டினம்' கண்டுபிடிக்கப்பட்டுள்ளது"

என்று மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துமூலம் பதிலளிக்கையில், உருக்கு — சுரங்க இணை அமைச்சர் ஷா நவாஸ் கான் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

ஆய்வு ஒன்றின்மூலம் மேற்கூறிய இடத்தில் 0.50 முதல் 2.20 மீட்டர் அகலமுள்ள 'மாலிப்டினம்' படிவங்கள் 44 மீட்டர் அளவு தூரத்திற்கு உள்ளன என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது; இப்படிவங்கள் 'அப்லைட்' 'கிரானைட்' வடிவிலும் காணப்படுகின்றன" என்று கூறினர்.

ஏற்றுமதிக்கான வாழைப் பழம்

உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை

சென்னை, நவ. 29—

வாழைப்பழ ஏற்றுமதியைப் பெருக்க வேண்டும் என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகத் தமிழ்நாட்டில் அதிகப் பகுதிகளில் வாழைச் சாகுபடியை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு வேளாண்மைத் துறை எடுத்துள்ளது.

குறிப்பாக வெளிநாட்டவர்கட்கு அதிகம் பிடித்த இரு ரக வாழைகள் சிறப்பாக சாகுபடி செய்யப்படுகின்றன.

சைதாப்பேட்டை வேளாண்மை மாவட்டத்தில் வாழை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், பெரும் அளவில் வாழைச் சாகுபடிக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் விவசாயிகளுக்கு அதிகாரிகள் அளித்து வருகின்றனர்.

கரூர் குழந்தைவேலு மறைவு

கூட்டுறவு இயக்கத்தில் முன்னணியில் இருந்தவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராகவும் — கழகத் தோழருமான கரூர் குழந்தைவேலு அவர்கள், தமது 50-வது வயதில் இயற்கையெய்திய செய்தி அறிவிக்க வருந்துகிறோம்.

திருச்சி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் தலைவராகவும், கரூர் வட்ட நிலவள வங்கியின் தலைவராகவும் கரூர் குழந்தைவேலு அவர்கள் இருந்துவந்தார்; மற்றும் பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களுடனும் அவர் தொடர்பு கொண்டிருந்தார்.

கழகத்தில் நீண்ட பல காலமாக அங்கம் பெற்று இயக்க வளர்ச்சியில் ஆர்வம் காட்டிச் செயலாற்றி வந்தார்.

சில காலமாக நோய்வாய்ப்பட்டு — வேலூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர், திடீரென இயற்கையெய்தினர். அவருக்கு மனைவியும் — ஆறு குழந்தைகளும் உள்ளனர்.

அமைச்சர் இரங்கல்

அவரது மறைவுச் செய்தி அறிந்த வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அவரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொண்டார்.

அவரது மறைவு கூட்டுறவுத் துறைக்கும் — கழகத்திற்கும் பேரிழப்பாகும்; அவரது மறைவால் ஆருந்துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்

நாள்தோறும் ஓர் இடத்தில் சந்தை

நடைபாதை வியாபாரிகட்கு வாய்ப்பளிக்க நாவலர் யோசனை

மேயர் கணேசன் ஓராண்டுப் பணிக்குப் பாராட்டு

சென்னை, நவ 29—

"சென்னை நகரில் உள்ள நடைபாதைக் கடைக்காரர்களுக்கு வசதியாக நாள்தோறும் வெவ்வேறு இடங்களில் சந்தை நடத்தலாம்"

என்று, கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் யோசனை தெரிவித்துள்ளார்.

சென்னை—கோடம்பாக்கம் 114-வது வட்டத்தில் மாநகராட்சியால் ரூ. 3½ இலட்சம் செலவில் கட்டப்பட்ட கழிவு நீர் இறைக்கும் நிலையத்தின் திறப்பு விழா நேற்று நடந்தது.

கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசியதாவது:—

"சென்னையில் ரூ 1 கோடியே 30 இலட்சம் செலவில் கழிவு நீர் இறைக்கும் நிலையங்கள் கட்டத் திட்டமிட்டு ஒவ்வொன்றாக நிறைவேறி வருகின்றன.

கடந்த ஓராண்டுக் காலமாக ஆர்வத்தோடு ஆனால் ஆரவாரம் இல்லாமலும் — சத்தோடும் ஆனால் சத்தம் இல்லாமலும் — மேயர் சா. கணேசன் சென்னை நகர் வளர்ச்சிக்குப் பல செயல்களைச் செய்து முடித்திருக்கிறார்; பதவிக்காலம் முடிகின்ற கடைசி நேரத்திலும் பயன்தரும் இந்த நிலையத்தைத் திறக்க வைத்துள்ளார்.

மேயர்களில் சிலர், தம் பதவிக்காலம் முடிந்தவுடன், 'நமக்கென்ன' என்று பொதுத்தொண்டிலிருந்து விலகி விடுவார்கள்; ஆனால் சா. கணேசன் பதவியில் இல்லாவிட்டாலும் தம் பணியினைத் திறம்படச் செய்வார் என்று நம்புகிறேன்.

இந்த மேயர் காலத்தில் நடைபாதைக் கடைகள் அகற்றப்பட்டு இருக்கின்றன; இப்படிக் கடைகள் அகற்றப்பட்டு இருப்பது — அந்தக் கடைக்காரர்களை நசுக்குவதற்காகவும், வாழ்க்கையைக் கெடுப்பதற்காகவும் அல்ல — அவர்களும் வாழ வேண்டியவர்கள்.

இதற்காக, சென்னையில் 7 பெரிய திடல்களைத் தேர்ந்தெடுத்து— அந்தப் பகுதியில் வாரம் ஒரு முறை சந்தை நடத்தலாம்; இந்தச் சந்தைகளில் நடைபாதை வியாபாரிகளிடம் மாறி மாறி — ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சந்தையில் வியாபாரம் நடத்தலாம்.

இப்படிச் சந்தைகள் அமைக்கப்படும் பகுதிகளில் வாரம் ஒரு முறை வியாபாரம் நடப்பதால், அந்தப் பகுதி மக்களுக்குப் பெரிதும் பயன்படும்.

இந்த 7 சந்தைகளில் ஒன்றாக ஞாயிற்றுக்கிழமை மட்டும் சென்னை சைனா பஜாரில் உயர்நீதிமன்றத்திலிருந்து பூக்கடை வரை சந்தை அமைக்கலாம்; சந்தைநாளில், போக்குவரத்தை நிறுத்திவைத்து சாலையின் முழுப் பகுதியையும் சந்தையாக மாற்றலாம்.

இப்படிச் சந்தைகள் ஏற்படுமானால், நடைபாதைகள் குறைந்து போக்குவரத்து வசதி எளிதாக நடைபெறும்; அதேநேரத்தில், சந்தைகளில் பொருட்களை மலிவான விலையில் வாங்கலாம்.

ஜப்பானில் உள்ள டோக்கியோ நகரில் இப்படித்தான் வாரம் ஒரு முறை சாலையை அடைத்துச் சந்தை நடத்துகிறார்கள்.

இப்படிப்பட்ட திட்டங்கள் நிறைவேற வேண்டுமானால், மக்களும் — மாநகராட்சி உறுப்பினர்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

சென்னை நகரை மேலும் அழகுபடுத்தவும்—தூய்மைப்படுத்தவும் திட்டங்கள் போட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன; இதற்குத் தகுந்த நிதி வசதி மாநகராட்சியில் இல்லை என்றும், அதற்காக மாநகராட்சியின் வருமானத்தைப் பெருக்க வேண்டும் என்றும் கூறினார்கள்; மாநகராட்சியின் வருமானத்தைப் பெருக்க அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது."

பிள்ளையைப் பெற்றோர் நீங்காக் கடமை

சென்னை, நவ. 29—

"ஒவ்வொரு தாயும் குழந்தைகளைப் பெற்றெடுத்துவிட்டால் மட்டும் போதாது — ஐந்தாண்டுக் காலத்துக்கு அந்தக் குழந்தையை வளர்க்கவேண்டிய முறையில் வளர்த்தால்தான், அந்தக் குழந்தை, பின்னால் நாம் எதிர்பார்க்கின்ற அளவுக்கு அறிவோடு — ஆற்றலோடு — உறுதியோடு — உள்ள வளத்தோடு விளங்க முடியும்; குழந்தைப் பருவத்தில் அது சக்கையாகவே வளர்ந்தால், 50 ஆண்டுக் காலத்திற்குப்பின் அது எதற்கும் பயன்படாமல்தான் போகும்.

"ஒரு குழந்தையினுடைய எலும்பு சரியாக அமைய வேண்டுமானாலும் சரி — இருதயம் சரியாக அமைய வேண்டுமானாலும் சரி — இரத்த ஓட்டம் சரியாக அமைய வேண்டுமானாலும் சரி — அதனுடைய மூளை வளர்ச்சி சரியாக அமைய வேண்டுமானாலும் சரி — அதனுடைய கண், காது உறுப்புக்களெல்லாம் முறைப்படி வேலைசெய்ய வேண்டுமானாலும் சரி — பிஞ்சுப் பருவமாக இருக்கின்ற குழந்தைப் பருவத்தில், சேரவேண்டிய சத்துக்கள் சேர்ந்து — அதனுடைய உடலிலே புகவேண்டிய சத்துணவுகள் எல்லாம் புகுந்து — அந்தந்த உறுப்புக்கள் வளருவதற்கு என்னென்ன சத்துணவுகள் சேரவேண்டுமோ அது உணவு வகைகளின் மூலமும் — மருந்து வகைகளின் மூலமும் — ஊட்டச் சத்து வகைகளின் மூலமும் — பால் வகைகளின் மூலமும் உடம்புகளிலே சேர்ந்தால்தான், அந்தக் குழந்தை தானாகவே வளரும்! பிறகு அறிவுடையவர்களாகத் திகழ்வார்கள்!

"அந்த வசதியை நாம் தராத காரணத்தினாலேயும், சக்கையாகவே நாம் வளர்த்துவருவதன் காரணத்தினாலேயும், பல பேருக்கு மூளை வளர்ச்சி உரிய முறையில் அமைவதில்லை; பல பேருக்குச் சிந்தனையே வருவதில்லை; பல பேருக்கு எதையும் சிந்திக்கின்ற ஆற்றலையும் பெற முடியவில்லை; இந்தக் குறைபாடுகளுக்கெல்லாம் காரணம், குழந்தைகளாக இருக்கும்போது முறையாக வளராததுதான்!"

— நாவலர் இரா. நெடுஞ்செழியன்

(சென்னை 42-வது வட்ட தாய் — சேய் நல விடுதித் திறப்பு விழாவில்)

கிழக்கு வங்க எல்லையில் பாகிஸ்தான் வலுத் தாக்குதல்

தற்காப்பில் ஈடுபட்ட இந்தியப் படையினர் 18 டாங்கிகளைக் கைப்பற்றிவிட்டனர்

மூன்று மைல் தூரம் எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓடச்செய்தனர்

புதுடில்லி, நவ. 30—

கிழக்கு வங்க எல்லையில் கடந்த 8 நாட்களாக நடைபெற்றுவரும் இந்தியா — பாகிஸ்தான் படைகளிடையே ஏற்பட்ட மோதலில் பாகிஸ்தானுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இதுவரையில் பாகிஸ்தானின் 18 டாங்கிகளை நாசப்படுத்தியோ — சேதப்படுத்தப்படாமல் கைப்பற்றியோ இந்தியப் படையினர் வெற்றி வாகை சூடியிருக்கின்றனர்.

இந்த மோதலின்போது இந்தியாவின் ஒரே ஒரு டாங்கி மட்டும் தடம் புரண்டு வீழ்ந்துவிட்டது; அந்தப் பகுதி கிழக்கு வங்க விடுதலைப் படையினரின் ஆதிக்கப் பகுதியாக இருந்ததனால், அந்த டாங்கியும் இந்தியப் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டது.

மற்றொரு மோதலில் ஒரு இந்திய டாங்கிக்கு இலேசான சேதம் ஏற்பட்டிருக்கிறது; அந்தச் சேதம் பழுது பார்க்கக் கூடியதேயாகும்.

இத்தனைக்கும் இந்தியப் படையினர், பாகிஸ்தான் படையினர் வலுத் தாக்குதலுக்கு வந்தால்தான் திருப்பித் தாக்குகின்றனர்; எனினும், இதற்காக எதிரியின் மண்ணிலேயே சென்று தாக்கவும் இந்தியப் படையினர் தயங்குவதில்லை.

பாலூர்காட் — ஹில்லி பகுதியில் வங்க தேசத்துக்குள் மூன்று மைல் தூரம் சென்று இந்தியப் படையினர், பாகிஸ்தான் படையினரைப் புறமுதுகிட்டோடச் செய்திருக்கின்றனர்.

இந்த மோதல்களில் பாகிஸ்தான் இராணுவத்துக்கு ஏற்பட்ட ஆட்சேதமும் கடுமையாக இருந்தது; 'ஓர் இந்தியச் சிப்பாய்க்கு 3 பாகிஸ்தான் சிப்பாய்' என்ற அளவில் சேதம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தப் பகுதியில் இறந்தவர்கள் — காயமடைந்தோர் எண்ணிக்கை — பாகிஸ்தான் தரப்பில் 160; இந்தியத் தரப்பில் 35.

விடுதலைப் படையினரின் வீரத் தாக்குதல்

கிழக்கு வங்கத்தில் இருக்கும் பாகிஸ்தான் இராணுவத்துக்கு இந்தியப் படையினரிடமிருந்து சந்திக்க வேண்டிய அபாயத்தைவிட, விடுதலைப் படையினரால் ஏற்படும் அபாயம் கடுமையாக இருக்கிறது.

ஜெஸ்சூரிலும் — சில்ஹெட்டிலும் பாகிஸ்தான் இராணுவம் திக்கு முக்காடி வருகிறதாம்.

சில்ஹெட் பகுதியில் ஜிபான் நகர் வீழ்ந்துவிட்டதாகப் பாகிஸ்தானே ஒப்புக்கொண்டுவிட்டது; ஆயினும், அதன் வழக்கமான பாணியில், அதை இந்தியத் துருப்புக்கள் கைப்பற்றியதாகப் பாகிஸ்தான் வானொலி கூறியது.

ஒரு சில இரயில் நிலையங்களில் வங்க தேசக் கொடி பறந்துகொண்டிருப்பதாகவும், இந்தப் பகுதிகளிலெல்லாம், சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த வங்க தேச சுதந்தர அரசு முயற்சி எடுத்துவருவதாகவும் விடுதலைப் படை அறிவித்தது.

பாகிஸ்தான் டாங்கிகளில்

இரகசிய உத்தரவுகள்

வங்க தேசத்தில் பாகிஸ்தான் படையினர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமான பல 'இரகசிய உத்தரவு'கள் அம்பலமாகியிருக்கின்றன; அந்த உத்தரவுகள் சென்ற வாரம் கிழக்கு எல்லையில் கைப்பற்றப்பட்ட 14 பாகிஸ்தான் டாங்கிகள் ஒன்றில் பொறிக்கப்பட்டிருந்தனவாம்.

அந்த டாங்கியில் 13 இரகசிய உத்தரவுகள் பொறிக்கப்பட்டிருந்தன; அவற்றில் ஒன்று — 'சவுதங்காவில் சிவிலியன்கள் யாரும் இருக்கக்கூடாது; எந்தத் தருணத்திலும் போர் தவிர்க்க முடியாததாகும்' என்பதாகும்.

இதர உத்தரவுகள் வருமாறு:—

"சவுதங்காவின் இரு புறங்களிலும் (எல்லையில்) படகுகள் தயாராக இருக்கும்; சவுதங்காவுக்கும் பின்னால் உடனடியாக 6 பஞ்சாப் படைகள் (ரிஜிமெண்ட்) வரலாம்."

கிழக்கு எல்லையில் முன்னணிப் பகுதிகளுக்குப் பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் சென்றபோது அந்த உத்தரவுகள் உள்ள பட்டியலின் நகல் அவரிடம் காண்பிக்கப்பட்டது.

இந்திய வீரர்கள் கைப்பற்றிய டாங்கிகள் — நொறுங்கிய நிலையில் — வரிசையாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தன; அவைகளையும் ஜெகஜீவன்ராம் பார்வையிட்டார்.

மத்திய அரசு ஊழியர்கட்கு ஊதிய உயர்வு

இடைக்கால நிவாரணத்தைக் கூட்டச் சிபாரிசு

மத்திய அரசு ஊழியர்களுக்கு 1971 செப்டம்பர் 1-ஆம் நாள் முதல் ரூ. 8 லிருந்து ரூ. 20 வரை கூடுதலாக இடைக்கால நிவாரணம் அளிக்கும்படி மூன்றுவது ஊதியக் குழு பரிந்துரை செய்திருப்பதாகத் தெரிகிறது.

12 மாத காலத்தில் பயன்படுத்துவோர் பண்டங்களின் மாதாந்திர சராசரி விலைக் குறியீட்டெண் 228 புள்ளியைத் தாண்டிய போது, ஊதியக் குழுவின் ஆலோசனையை மத்திய அரசு நிதித் துறை கேட்டிருக்கிறது.

இடைக்கால நிவாரணம் பற்றி ஊதியக் குழு சென்ற ஆண்டு பரிந்துரை செய்தபோது, வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் 218 என்ற நிலவரத்தை அடிப்படையாகக் கொண்டது.

"விலைக் குறியீட்டெண் 228-ஐ எட்டும்போது நிலைமையை அரசு மறு பரிசீலனை செய்லாம்" என்றும் அது கூறியிருந்தது.

கூடுதல் இடைக்கால நிவாரணம் பற்றி ஊதியக் குழு செய்துள்ள பரிந்துரை, இப்போதுதான் அரசுக்குக் கிடைத்திருக்கிறது; அரசு இந்தப் பரிந்துரையை அடுத்த சில நாட்களில் பரிசீலிக்கக்கூடும் எனத் தெரிகிறது.

ரூ. 1,250 வரையுள்ள மாதாந்தர அடிப்படை சம்பளங்களுக்கு ரூ. 8 முதல் ரூ 20 வரை கூடுதல் இடைக்கால நிவாரணம் கிடைக்கும். (ரூ 85 வரையுள்ள அடிப்படைச் சம்பளங்களுக்கு ரூ. 8-ம், ரூ 85 முதல் ரூ. 209 வரையுள்ள சம்பளங்களுக்கு ரூ. 10-ம், ரூ. 210 முதல் 499 வரையுள்ள சம்பளங்களுக்கு ரூ. 15-ம், ரூ 500 முதல் ரூ 1,250 வரையுள்ள சம்பளங்களுக்கு ரூ. 20-ம் கூடுதல் இடைக்கால நிவாரணம் தரப்படும்.)

ஊதியக் குழுவின் பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டால், அரசுக்கு ஒரு முழு அபிவிருத்திக்கு ரூ. 40 கோடியும், நடப்பு ஆண்டில் ரூ. 20 கோடியும் கூடுதல் செலவாகும் என்று தெரிகிறது.

அதிபர் நிக்சன் அனுப்பிய செய்தி

தலைமையமைச்சர் இந்திராவிடம் தரப்பட்டுவிட்டது

புதுடில்லி, நவ. 30—

அமெரிக்க அதிபர் நிக்சன் அனுப்பியுள்ள செய்தி ஒன்றை இங்குள்ள அமெரிக்கத் தூதர் கென்னத் கீட்டிங், தலைமை அமைச்சர் இந்திரா காந்தியிடம் கொடுத்தார்.

இந்தியா — பாகிஸ்தான் நெருக்கடி நிலைமையைப் பற்றித்தான் இச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

அதே செய்தியைத்தான் அவர், அதிபர் யாகியா கானுக்கும், சோவியத் தலைமையமைச்சர் கோசிஜினுக்கும் அனுப்பியிருக்கிறார்.

செய்தியில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல கீட்டிங் மறுத்துவிட்டார்.

'தலைமையமைச்சருடன் என்ன பேசினீர்கள்' என்ற கேள்விக்கும் அவர் பதில் சொல்லவில்லை.

"ஏதாவது சொல்வதாக இருந்தால், தலைமையமைச்சர்தான் சொல்ல வேண்டும்" என்று கீட்டிங் கூறினார்.

இந்தியா — பாகிஸ்தான் நெருக்கடி நிலைமை பற்றி அமெரிக்கா ஏற்கனவே திரும்பத் திரும்பக் கூறியுள்ள அம்சங்களே இந்தச் செய்தியில் இடம் பெற்றுள்ளன என்று தோன்றுகிறது.

"நெருக்கடி நிலவரம் மோசமடையாமல் இருக்கத் தம்மால் இயன்ற அனைத்தையும் செய்ய வேண்டும்" என்று இந்திரா காந்திக்கு இந்தச் செய்தியில் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது என்று கருதப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (34, [illegible] தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பாகிஸ்தானிலுள்ள.....

இந்தியத் தூதரின் அறிக்கை

நாடாளுமன்றத்தில் கடும் எதிர்ப்பு

முழுத் தகவலும் கிடைத்ததும் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் சுவரண் சிங் உறுதி

புதுடில்லி, நவ. 30—

பாகிஸ்தானில் இந்தியத் தூதராக இருக்கும் ஜே. கே. அதல், வங்க தேசப் பிரச்சினைக் குறித்து இந்திய அரசின் கொள்கைக்கு எதிரான ஓர் அறிக்கையை செய்தியாளர்கட்கு விடுத்தார் என்று கூறி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் அவரைத் திருப்பியழைக்க வேண்டுமென்று அரசை வற்புறுத்தினர்.

நாடாளுமன்ற இரு அவைகளின் உறுப்பினர்களும், அதலின் நடவடிக்கையில் மிகவும் கோபமடைந்தனர்.

"அதலின் அறிக்கை பொறுப்பற்றதும், இந்திய நலனுக்கு அபாயம் விளைவிப்பதும் ஆகும்" என்று உறுப்பினர்கள் கூறினர்.

"பாகிஸ்தானில் ஒரு சிவில் நிர்வாகம் அமைக்கப்பட்டால் போர் மூளும் வாய்ப்பு பாதி குறைந்துவிடும்" என்று அதல், அமெரிக்கச் செய்தி நிறுவனத்திடம் கூறியிருந்தார்.

"அதலின் அறிக்கை, அரசின் ஒப்புதலுடன் வெளியிடப்பட்டதா?" என்று உறுப்பினர்கள் கேட்டனர்.

ஜன சங்க உறுப்பினர் வாஜ்பாயி, 'அதல் இந்தியத் தூதுவரா அல்லது மேற்கு நாடுகளின் பிரதிநிதியா?' என்று வினவி, 'உண்மையில் திரைமறைவில் அப்படி ஏதாவது யோசனைகள் இருந்தால் அதனை அரசு விளக்க வேண்டும்' என்றும் கேட்டுக்கொண்டார்.

உறுப்பினர்களை அமைதிப்படுத்திப் பேசிய வெளியுறவுத் துறை அமைச்சர் சுவரண் சிங், 'அதல் அறிக்கையின் முழு விவரம் இன்னமும் கிடைக்கவில்லை; அது கிடைத்த பிறகு, அதல் அறிக்கை இந்தியக் கொள்கைக்கு விரோதமாக இருந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்' என்றும் உறுதியளித்தார்.

சென்னை மேயராக..

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ராமன், இந்தியாவின் இரண்டாவது பெண் மேயராவார்.

இந்தியாவிலேயே முதன் முதலாக ஒரு பெண்மணியை மேயராகத் தேர்ந்தெடுத்ததும் சென்னை மாநகராட்சிதான்.

(1957—58-ல் திருமதி தாரா செரியன் கிருஸ்துவர் சமூகத்துக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும்வகையில் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.)

மாநகராட்சி கடைபிடித்துவரும் மரபுப்படி, பிராமண வகுப்பைச் சேர்ந்தவரான திருமதி காமாட்சி செயராமன் இந்த ஆண்டு மேயராகத் தேர்வு பெற்றிருக்கிறார்.

துணை மேயர் வாழ்க்கைக் குறிப்பு

துணை மேயராகத் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ள என்.வி.என்.சோமுவுக்கு வயது 34.

இவர், தமிழகத் தொழிலாளர் நல அமைச்சர் திரு. என.வி. நடராசன் அவர்களின் மூத்த மகன் ஆவார்.

சென்னை 28-வது வட்டத்தில் (கொண்டித்தோப்பு) போட்டியிட்டு மாநகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும், தியாகராயர் கல்லூரியிலும கல்வி பயின்று பி.ஏ. பட்டம் பெற்றார். பிறகு சட்டக் கல்லூரியில் படித்து 'பி.எல்.' பட்டம் பெற்றார்.

1968-ம் ஆண்டு முதல் வழக்கறிஞராக இருந்து வருகிறார்.

1938-ம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் திரு. என்.வி. நடராசன் அவர்கள், குடும்பத்துடன் சிறை சென்றபோது ஒன்றரை வயதுக் குழந்தையான சோமுவும் தாயாருடன் சிறையில் இருந்தார்.

1965-ம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீவிரப் பங்கு கொண்டு சிறை சென்றார்.

1954-ம் ஆண்டில் தி.மு. கழக உறுப்பினரானார்; மாவட்டப் பிரதிநிதியாகவும், சென்னை மாவட்ட தி.மு.க. மாணவர் அமைப்பாளராகவும் பொறுப்பு ஏற்றார்.

சோமு—பேச்சுவன்மை படைத்தவர்; தியாகராயர் கல்லூரியில் படிக்கும்போது மாணவர் சங்கத் தலைவராகப் பதவி வகித்தார்; அனைத்துக் கல்லூரித் தமிழ்ப் பேரவைத் தலைவராக இருந்திருக்கிறார்.

சினிமாத் தொழிலாளர் சங்கம், கிளாக்சோ-ஹால்டா தொழிலாளர் சங்கம் உட்பட 15 தொழிற் சங்கங்களின் தலைவராக சோமு பொறுப்பு வகிக்கிறார்.

இந்தியா மீது 'புனிதப் போர்' நடத்த வேண்டுமாம்

இராவல்பிண்டி, நவ. 30—

"பெரும்பாலும் முஸ்லிம்களே உள்ள பாகிஸ்தான்மீது இந்தியா ஆக்கிரமிப்புச் செய்துவிட்டது; இதனால், இந்தியா மீது 'புனிதப் போர்' (ஜிகாத்) நடத்த வேண்டும்"

என்று லாகூரில் மௌலானா முப்தி மஹ்மூன், தொழுகையின்போது ஒரு அறிக்கையை வாசித்தார்.

தொழிலாளர் நல அமைச்சர்

என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

டிச. 1: காலை 8 மணி: மதுரை—ஆய்வாளர் மாளிகையில் தங்கல்; மாலை 4-மணி: மதுரை—பூதானி வாரியக் கூட்டம்; 5 மணி: தொழிலாளர் கல்வி நற்சான்று வழங்கும் விழா.

போக்குவரத்துத் துறை அமைச்சர்

ச. இராமச்சந்திரன்

நிகழ்ச்சிகள்

நவ. 1 காலை 8 மணி: கடலூர் (தென்னாற்காடு மாவட்டம்)—தீவிர குடும்ப நலத் திட்டத் துவகக விழாவில் கலந்துகொள்ளல்.

நவ. 2 காலை 9 மணி: காளகட்டிநுதபுரம்—திருமண நிகழ்ச்சியில் கலந்துகொள்ளல்; 10-30 மணி: திருமுல்லைவாசல்—கிராம வேலை வாய்ப்புத் திட்டத் துவக்க விழா; 11-30 மணி: சீர்காழி—நலவாழ்வுத் திட்ட நிலையத்தைப் பார்வையிடல்; மாலை 5 மணி: கீழ சட்டநாதபுரம் — மின்விளக்கேற்று விழா; 6 மணி பூம்புகார்—மின்விளக்கேற்று விழா; 6-30 மணி: பொறையார்—பொதுக் கூட்டம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாட்டு அரசின் பரிசுச் சீட்டு விற்பனை அனுமதிக்கப்பட்டுள்ளதோ அந்தந்த மாநிலங்களின் பரிசுச் சீட்டுகளை மட்டுமே தமிழ்நாட்டில் விற்பனை செய்ய வழங்கப்பட்டுள்ளது.

இத்தகவலை, தமிழ்நாடு அரசு வழக்கறிஞர், நேற்று நீதிமன்றத்தில் அறிவித்தார்.